2009 ஜூலை 16]

மட்டுமே என்றிருந்தது. பின்னர் co-education கல்லூரியாக இன்று வளர்ச்சி பெற்றிருக்கிறது. ஆகவே, அதுபோல அந்தப் பகுதி மக்கள் விரும்புவார்களேயானால், அது பெண்கள் கல்லூரி என்று மட்டுமில்லாமல், co-education கல்லூரியாக அதை மாற்றுவதற்கு அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளும். அதற்கு அந்தப் பகுதி மக்களுடைய கருத்தைக் கேட்டறியவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து வினா வரிசை எண் 163, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**163—**

**கோட்டம்**

***97871—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு திருநெல்வேலியை தலைமையிடமாகக் கொண்டு கோட்டம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், மதுரை மற்றும் மாநகரப் போக்குவரத்துக் கழகம், சென்னை ஆகிய போக்குவரத்துக் கழகங்களைப் பிரிப்பதற்கு, அரசு ஆணை (4டி) எண் 3, போக்குவரத்துத் துறை, நாள் 13-8-2008-ல் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக்குழு தனது அறிக்கை சமர்ப்பிக்கும் காலத்தினை நீட்டிக்கக் கோரியுள்ளது. அக்குழுவின் முழுமையான ஆய்வு அறிக்கை கிடைக்கப்பெற்றபின், அதனடிப்படையில் திருநெல்வேலியை தலைமையிடமாகக்கொண்டு கோட்டம் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் போக்குவரத்துத் துறை என்ற அளவில், 2 இலட்சம்

குடும்பங்களைச் சேர்ந்த பணியாளர்கள் பணியாற்றுகிறார்கள் என்றால், அதற்கு முதன்முதலாக அடிப்படை வசதியை ஏற்படுத்திக்கொடுத்தவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தினை முதன்முதலாக ஆரம்பித்து இன்று 2 இலட்சம் ஓட்டுநர்கள், நடத்துநர்கள் மற்றும் பணியாளர்களெல்லாம் பணிசெய்து அந்தக் குடும்பங்கள் வாழ்கின்றன. அதேபோன்று, ஒரு கோடிக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பேருந்திலே சென்று நல்ல கல்வியும் பயின்றுவருகிறார்கள். தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கோட்டங்களாகப் பிரித்தபோது திருநெல்வேலியிலே ஒரு கோட்டம் இருந்தது. திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி ஆகிய மூன்று மாவட்டங்களை உள்ளடக்கிய அந்தக் கோட்டம், கடந்த கால ஆட்சியில் amalgamation என்ற முறையில் திருநெல்வேலி கோட்டத்தை மட்டும் விட்டுவிட்டு மற்ற கோட்டங்களை உருவாக்கிவிட்டார்கள். தற்போது ஏழு கோட்டங்கள் இருக்கின்றன. ஆகவே, திருநெல்வேலியில் ஏற்கெனவே இயங்கிவந்து, கடந்த கால ஆட்சியில் நிறுத்தப்பட்ட கோட்டத்தை, இப்போது அமைப்பதற்கு குழு அமைத்திருக்கிறது என்று சொன்னீர்கள். எவ்வளவு காலத்தில் அந்தக் குழுவினுடைய பரிந்துரையை அரசுக்கு அனுப்பி, எவ்வளவு காலத்தில் இந்தப் புதிய கோட்டம் உருவாக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் 23 போக்குவரத்துக் கழகங்களாக இருந்ததை, அவை கம்பெனிகள் சட்டத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கின்ற காரணத்தால், 7 போக்குவரத்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திற்கும் குறிப்பிட்ட அளவிற்கு பேருந்துகளை ஒதுக்கித் தந்துள்ளார்கள். செலவைக் குறைப்பதற்காக அந்தப் பணி செய்யப்பட்டது.

ஆனால், இப்போது நம்மிடம் இருக்கின்ற பேருந்துகளுடைய எண்ணிக்கை 20,013. சாதாரண பேருந்துகள் 14,749-ம், Semi low-floor தாழ்தளப் பேருந்து 1,184-ம், Vestibule bus தொடர் பேருந்து 140-ம், A.C. Bus 30, Deluxe 860, Super Deluxe 344, Semi-Deluxe பஸ் 2,602, சாதாரண A.C. Bus 100, Omni Bus 4 என்ற வகையிலே,

2009 ஜூலை 16]

20,013 பஸ்கள் இருக்கின்றன. இதிலே மாநகர் போக்குவரத்துக் கழகத்திலே 3,257 பஸ்களும், விரைவுப் போக்குவரத்துக் கழகத்திலே 1,041 பஸ்களும், விழுப்புரம் போக்குவரத்துக் கழகத்திலே 3,253-ம், சேலத்திலே 2,026-ம், கோவையிலே 2,906-ம், கும்பகோணத்திலே 3,432-ம், மதுரையிலே 4,098 என்ற வகையிலே இருந்துகொண்டிருக்கிறது. இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பேருந்துகள் உள்ள போக்குவரத்துக் கழகங்கள் எவை எவை இருக்கின்றனவோ அவற்றையெல்லாம் பிரிக்கலாம் என்று கருதித்தான் கடந்த 9-4-2008 சட்டமன்ற மானியக் கோரிக்கையில் சேலத்தை, மதுரையை, சென்னையை இரண்டாகப் பிரிக்கலாம் என்றும், அப்படிப் பிரித்தால் எவ்வளவு செலவாகும் என்பதை கணக்கிடுவதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டது. 13-8-2008-ல் குழு அமைக்கப்பட்டது. அது 10-9-2008-ல் மாற்றியமைக்கப்பட்டு இரண்டு மாத காலத்தில் அவர்களுடைய அறிக்கை தரவேண்டுமென்று சொல்லப்பட்டது. ஆனால், அவர்கள் இன்னும் கொஞ்சம் கால அவகாசம் கேட்டிருக்கிறார்கள். அவர்கள் அறிக்கை தந்த பிறகு திருநெல்வேலியைத் தலைமையிடமாகக்கொண்டு ஒரு கோட்டம் நிச்சயமாக அமைக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலியைத் தலைமையிடமாகக்கொண்டு விரைவிலேயே அரசுப் போக்குவரத்துக் கழகக் கோட்டம் அமைக்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோல, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள பேருந்துகளெல்லாம் சற்று வயதான பேருந்துகளாக இருக்கின்றன. ஆகவே, முத்தமிழறிஞர், டாக்டர் கலைஞர் அவர்கள், தற்போது 2000-க்கும் மேற்பட்ட புதிய பேருந்துகள் வாங்குவதற்கு அனுமதியளித்துள்ளதால், மிக அதிகமான பேருந்துகள் அந்த மூன்று மாவட்டத்திற்கும் வழங்கப்படுமா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 3 ஆண்டுகளில் மதுரை போக்குவரத்து

மண்டலத்திற்கு கிட்டத்தட்ட ஆயிரம் புதிய பேருந்துகளை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழங்கி இருக்கிறார்கள். இந்த ஆண்டும் 1,000 புதிய பேருந்துகள் அந்த மதுரை போக்குவர்த்துக் கழகத்திற்காக வழங்க உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே புதிய பேருந்துகள் வருகின்றபோது ஆயிரத்திற்கும் மேற்பட்ட புதிய பேருந்துகளை மதுரை போக்குவரத்துக் கழகத்தில் இணைக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 164, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**164—**

**துணை சுகாதார நிலையம்**

***18713—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரூர் வட்டம், ஈட்டியம்பட்டி கிராமத்தில் துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சமவெளிப் பகுதியில் 5,000 மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் அமைக்கப்படுகிறது. தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், ஈட்டியம்பட்டி கிராமத்தின் மக்கள் தொகை 1,200 ஆகும். இந்த கிராமத்திலிருந்து 2 கிலோ மீட்டர் தூரத்தில் வேப்பம்பட்டி துணை சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. எனவே, ஈட்டியம்பட்டி கிராமத்தில் துணை சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் தொகுதிக்குட்பட்ட பொன்னேரி பஞ்சாயத்திலிருக்கக் கூடிய மைய கிராமமான ஈட்டியம்பட்டியை சுற்றி புதூர், கூச்சனூர்,